**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

OS.616/2018

நாள். 02.11.2021

| | | | |
|---|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி: | :.வா.சா.4 | ஜாதி | : |
| பெயர் | நாகலட்சுமி | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி. நான் ஓமலூர் வட்டம், செலவடை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக ஒரு ஆண்டாக பணி செய்து வருகிறேன். செலவடை கிராமம் ச.எண்.203/1Aல் விஸ்திரணம் 4 ஏர்ஸ், அது பின்னிட்டு 203/1A1, 203/1A2 என உட்பிரிவு ஏற்பட்டுள்ளது. 203/1A2ல் ஒரு தார்சு வீடு மற்றும் ஒரு அட்டை வீடு உள்ளது. அது கோவிந்தன் வகையறாவின் அனுபோகத்தில் உள்ளது. எனது விசாரணையில் சுமார் 25 ஆண்டுகளாக மேற்படி வீட்டில் தற்போது வரை அவர்கள் குடியிருந்து வருவதாக எனது விசாரணையில் தெரிய வந்தது. 203/1A2ல் விஸ்திரணம் 2 ஏர்ஸ். வருவாய் துறையில் மேற்படி சொத்திற்கான பட்டா கோவிந்தன் மனைவி வெள்ளையம்மாள் மற்றும் கோவிந்தன் மகன் சரவணன் ஆகியோர் பெயரில் ஏற்பட்டுள்ளது. எனது விசாரணையில் சரவணன் சேலத்தில் வசிப்பதாகவும், வெள்ளையம்மாள் செலவடையில் வாடகை வீட்டில் இருப்பதாக தெரிந்துகொண்டேன்.

**குறுக்கு விசாரணை - 1ம் பிரதிவாதி தரப்பில் இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை - 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்**

நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையை சென்ற வாரம் நான் பெற்றுக்கொண்டேன். ஒரு நபருக்கு இரண்டு வீடுகள் இருந்தால் ஏதேனும் ஒரு வீட்டில் குடியிருப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் ஆமாம். வழக்கில் வெள்ளையம்மாள் பிரதிவாதியாக உள்ளார். பிரதிவாதியின் பெயரில்தான் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். வருவாய் ஆவணங்கள் சுவாதீனங்கள் மற்றும் உரிமையை அனுசரித்து வழங்கப்படும் என்றால் பத்திர ஆவணங்களின் அடிப்படையில் வழங்கப்படும்.

**மறுவிசாரணை**

இல்லை.

**ஒப்பம்/PW4**

**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**